**கவனிக்க.-** 2020.03.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** COVID - 19 தொற்றுநோய் காரணமாக 2020.04.03 ஆந் திகதிய 2170 ஆம் இலக்க, 2020.04.09 ஆந் திகதிய 2171 ஆம் இலக்க, 2020.04.17 ஆந் திகதிய 2172 ஆம் இலக்க, 2020.04.24 ஆந் திகதிய 2173 ஆம் இலக்க, 2020.04.30 ஆந் திகதிய 2174 ஆம் இலக்க, 2020.05.06 ஆந் திகதிய 2175 ஆம் இலக்க, 2020.05.15 ஆந் திகதிய 2176 ஆம் இலக்க மற்றும் 2020.05.22 ஆந் திகதிய 2177 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2178 - 2020 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2020.05.29

2178 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 476 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


475-B 82025-405 (2020/05)

**விசேட அறிவித்தல்**

COVID - 19 தொற்றுநோய் காரணமாக நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்திக் கண்காணித்தல் நடவடிக்கையின் காரணமாக அரசாங்க மற்றும் தனியார் துறை சார்ந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டமையினால் 16.03.2020 முதல் 11.05.2020 ஆந் திகதி வரை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அறிவித்தல்கள் எதுவும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்படவில்லை.

# அரசாங்க அறிவித்தல்கள்

## காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டம்*

*27 ஆம் பிரிவின் கீழ் நில அளவைகள் சபையின் உறுப்பினர்களை நியமனம் செய்தல்*

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிலஅளவைகள் சட்டத்தின் 27 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிலஅளவைகள் சபையின் உறுப்பினர்களை நியமனம் செய்து 2020.02.14 ஆந் திகதிய 2163 ஆம் இலக்க மற்றும் 2020.03.03 ஆந் திகதிய 2166 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 2020.02.26 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தம் செய்கின்றேன்.

(அ) பதவி வழி உறுப்பினர்கள்:

I. அம்பவல லியனகே ஷாயாமலி சித்ரலேகா பெரேரா, நில அளவையாளர் நாயகம், தலைவர், 2020.02.26 ஆந் திகதி தொடக்கம் நில அளவையாளர் நாயகம் பதவியில் இருக்கும் காலப்பகுதி வரை.

II. விஜயரத்ன தென்னகோன் முதியன்சேலாகே சிசிர பண்டார தென்னகோன், மேலதிக நில அளவையாளர் நாயகம், உப தலைவர், 2020.02.26 ஆந் திகதி தொடக்கம் மேலதிக நில அளவையாளர் நாயகம் பதவியில் இருக்கும் காலப்பகுதி வரை.

எஸ். எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு.
2020, மே 20.

5-47

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.